Registered as a Newspaper in Ceylon ★★ சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 7 (6 2 66) இதழ் 358
தை 24 ஷவ்வால் 14 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

## பட்டினிபோடும் மந்திரி

திருச்சூர், பெப், 5
மத்திய உணவு மந்திரி சுப்ரமண்யத்தின் கொடும்பாவி ஒன்றை கேரள மணவர்கள், ஒரு உயர்தரப்பாடசாலைக்குமுன் எடுத்துச் சென்று, "கேரளமக்களைப் பட்டினி போடும் மந்திரி இதோ இருக்கிறார்" என கோஷமிட்டார்கள். ஆனால் பொலிஸார் உரிய தருணத்தில்வந்து அவர்களை விரட்டி விட்டார்கள்.

# தமிழ் சட்ட விதிகள் அமுலுக்கு வந்தன

## அரசாங்கத்துடன் தமிழர்கள் தமிழில் தொடர்பு கொள்ளலாம்

நல்லூர், ஞாயிறு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்கும் தமிழ் மொழி (விசேஷ) சட்ட விதிகள் இலங்கையின் பதினெட்டாவது சுதந்திர தினமான கடந்த 4-ம் திகதியில் இருந்து அமுலுக்குவந்துள்ளது. இதுசம்பந்தமான உத்தரவுகள் இவ்வாரத்தில் எல்லா அரசாங்க அதிகாரிகளுக்கும் கிடைக்கவிருக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மக்கள் தனிப்பட்ட முறையில் அரசாங்கத்துடன்தொடர்பு கொள்ள இச்சட்ட விதிகள் வகைசெய்கின்றன. தமிழ் மொழியில் தொடர்புகொள்ளும் தமிழ் மக்களுக்கு அவர்கள் எழுதும் மொழியிலே பதில் அனுப்பப்படும். இந்த இரு மாகாணங்களிலுமுள்ள அரசாங்க அதிகாரிகள் அரசகரும மொழியிலேதான் அரசாங்கத்துடன் தொடர்புகொள்ள வேண்டியநிலையையடைந்திருக்கிறார்கள்.

ஜனவரி 8-ந் திகதி பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி விசேஷ விதிகள் சட்டம் தமிழ் மக்களுக்குச் சுதந்திரதினப் பரிசாகச் சுதந்திரதினத்தன்று அமுலுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது என உடுவில் எம் பி. திரு. வி. தருமலிங்கம் வலிகாமம்வடக்கில் நடைபெற்ற கூட்டமொன்றில்பேசும் போது குறிப்பிட்டார்.

இரண்டொரு தினங்களில் வெளிவரவிருக்கும் அரசாங்க வர்த்தமானியில் தமிழ்மொழி விசேஷ விதிகள் பற்றிய உத்தரவுகள் பிரகடனப்படுத்தப்படவிருக்கிறது இச்சட்டத்தின் பெறுபேறு உத்தியோகபூர்வமாக அல்லது தனிப்பட்டரீதியில் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்புகொண்டால்அவர்களுக்குக் தமிழ்மொழியில் சட்டரீதியாசப்பதில் கிடைக்கும்.

## ரூ. 1001 பரிசு பெற்ற அதிர்ஷ்டக் குழந்தை

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் ஆஸ்பத்திரியில் திரு. அ. விஷ்ணுசுந்தரம் தம்பதிகளால் அமைக்கப்பட்ட சிற்றம்பலம்-பார்வதிப்பிள்ளை பிரசவ விடுதியில் முதற் குழந்தையைப் பிரசவித்து 1001 ரூபா பரிசைப் பெறும் அதிர்ஷ்டம் பருத்தித்துறையைச் சேர்ந்த பெண்மணி ஒருவருக்குக் கிடைத்துள்ளது. பருத்தித்துறையைச் சேர்ந்த வியாபாரியான வ சுப்பிரமணியம் என்பவரின் மனைவி புதிய விடுதியில் முதல் முறையாக ஒரு பெண்குழந்தையைப் பெற்றெடுத்தார்.

திரு சுப்பிரமணியத்திடம் விஷ்ணுசுந்தரம் தம்பதிகள் பரிசுக்குரிய காசோலையை உடன்வழங்கினார்கள்.

### கோவிலுக்கு நன்கொடை

இந்த ஆயிரத்து ஒருரூபாவைப் பெற்றுக்கொண்ட சுப்பிரமணியம் தம்பதிகள் இப்பணத்தை பருத்தித்துறை தெளிப்பிள்ளையார் கோவிலுக்கு நன்கொடையாக அளித்தனர்

## "பொருளாதார சுதந்திரத்துக்கு பாடுபட்டு உழைக்கவேண்டும்"

### சுதந்திரதின விழாவில் திருமலை அதிபர் நெவில் ஜெயவீரா வேண்டுகோள்

திருகோணமலை, சனி

கடந்த பத்துவருடங்களின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் நேற்று சுதந்திர தினக் கொண்டாட்டத்தை மக்கள் வெகு குதூகலத்துடன் கோலாகலமாகக் கொண்டாடினர். நாட்டின் பல பகுதிகளிலும் சுதந்திர தின விழாக்கள் மிகக் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

திருமலை மக்கேஸியர் விளையாட்டரங்கில் நேற்று பி. ப. 3 மணிக்கு சுதந்திரக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகியது. பாடசாலை மாணவ, மாணவிகளின் அணி வகுப்பு மரியாதையை அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா, திருமலை எம். பி. திரு எம். மாணிக்கராசா, திருமலைநகரசபைத் தலைவர் டாக்டர் சிவானந்தன், மாவட்ட நீதிபதி திரு. சிறிமவேன் அமரசிங்கா ஆகியோர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா பேசுகையில், "400 ஆண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடந்த இலங்கை மக்கள் 18 வருடங்களுக்குமுன்னர் சுதந்திரம் பெற்றனராயினும், கடந்த பல ஆண்டுகளாக கருத்து வேறுபாடுகளால் பிரிந்துகிடந்த இரு இனமக்கள் ஒன்றுசேர்ந்து இம்முறையே சுதந்திரதினத்தைக் கொண்டாடுகின்றனர் நாட்டின் மக்களிடையே ஏற்பட்டுள்ள இந்த ஒற்றுமை நீண்டு நிலைக்கவேண்டும். இன ஒற்றுமை மூலம் பொருளாதார சுதந்திரத்துக்கும் வகைசெய்து நாட்டை வளமாக்கவேண்டும். அதற்கான நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன" என்று குறிப்பிட்டார்.

திருமலை எம். பி. திரு. எம். மாணிக்கராசா பேசுகையில் குறிப்பிட்டதாவது: "இந்தமுறைதான் தமிழ் பேசும் மக்கள் சுதந்திர உணர்ச்சியுடன் சுதந்திர தினவிழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளமுடிந்தது. கடந்த [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் அதிர்ஷ்டசாலிகள்

பம்பலப்பிட்டி, சனி

சென்ற வியாழக்கிழமை இழுக்கப்பட்ட 75-வது தேசிய சுவீப் சீட்டிழுப்பில் பரிசுபெறும் டிக்கட்டுகள் வருமாறு:

முதலாவது பரிசு
06 Q 0819 ரூ. 36,500

இரண்டாவது பரிசு
10 J 0017 ரூ. 14,600

மூன்றாவது பரிசு
03 A [illegible] ரூ. [illegible]650

(2-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி

## பதினேழு ஆசிரியர்களின் இடமாற்றம் ரத்து

### ஏழு ஆசிரியர்களின் இடமாற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியிலிருந்து சமீபத்தில் இடமாற்றம்செய்யப்பட்ட 7 ஆசிரியர்களின் இடமாற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் 17 ஆசிரியர்களின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டு விட்டதாகவும் அறியப்படுகிறது.

ஆசிரியர் கைநூலின் தொழிற்சட்ட 61-வது விதிகளுக்கிணங்க தொழிற்சங்க நிர்வாகிகளை இடமாற்றம் செய்யக்கூடாது என்பதனை வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினர் சுட்டிக்காட்டியதன்பேரிலேயேஏழு பேரது இடமாற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இடமாற்றத் திட்டத்திலுள்ள சில தவறுகள் பற்றி கல்வி மந்திரிக்கு சுட்டிக்காட்டப்பட்டதால் மற்ற 17 ஆசிரியர்களது இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இடமாற்றத் திட்டத்தின் கீழ் இவ்வருட ஆரம்பத்தில் வட மாகாணத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டு இன்னமும் இடமாற்றம் செய்யப்பட்ட இடங்களுக்குச் செல்லாத சுமார் 80 ஆசிரியர்கள் தாம் இடமாற்றம் செய்யப்பட்ட இடங்களுக்கு மே மாதத்தில் செல்லவேண்டியிருக்குமென அறியப்படுகிறது

மேற்படி இடமாற்றத்தால் சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவும் சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் கூடுதலாகவும் இருப்பதாகவும் இதனைச் சரிப்படுத்த இம் மாதம் 15-ம் திகதியளவில் உள்ளூர் இடமாற்றம் மேற்கொள்ளப்படலாமெனவும் நம்பப்படுகிறது

## 3 தேர்தல் வழக்குகள் மீண்டும் விசாரணை

பம்பலப்பிட்டி, சனி

பண்டாரகம, கொலன்னுவ, அத்தனகலை தேர்தல் சம்பந்தமான வழக்குகளை மீண்டும் விசாரணை செய்ய வேண்டுமென்று நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட மூன்று தொகுதிகளுக்கான தேர்தல்களை ஆட்சேபித்து தாக்கல் செய்த வழக்குகள் முன்னர் விசாரிக்கப்பட்டு வெவ்வேறு விசாரணை நீதிமன்றங்களினாலும் தள்ளுபடிசெய்யப்பட்டிருந்தன ஆனால்வழக்கைத் தாக்கல் செய்தவர்கள் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்திருந்தனர்

பிரதம நீதியரசர் ஸன் ஸோனியைத் தலைவராகக் கொண்ட மூன்று நீதியரசர்கள், அப்பீல் மனுவை விசாரணை செய்தபின்னர், இத்தேர்தல்கள் சம்பந்தமான வழக்குகள் மீண்டும் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று இன்று தீர்ப்பளித்தனர்.

### 'லூனா-9' வேலை முடிகிறது

மாஸ்கோ, பெப் 5

ரஷ்யாவின் "லூனா-9" விண்வெளி நிலையம் இன்றிரவு தனது ஆராய்ச்சிகளை முடித்துக் கொள்ளுமென்று சோவியத் செய்தி ஸ்தாபனமான "டாஸ்" அறிவித்துள்ளது.

### இன்று பார்லிமெண்ட்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

ஜனப்பிரதிநிதிகள் சபை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கூடுகிறது.



அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஆணும் பெண்ணும் அடிப்படையில் ஒன்று. ஆதலால் அவர்களது பிரச்னைகளும், அநேகமாக ஒன்றாகவே இருக்கவேண்டும். இருவரது ஆத்மாவும் ஒன்றே. வாழ்க்கை, உணர்ச்சியிலும் அப்படியே. ஒருவர் மற்றவரது தீவிர ஒத்துழைப்பின்றி வாழ முடியாது.

—மகாத்மா காந்தி

ஈழநாடு
EELANADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EPLA NADU Jaffna. Phone: 317
யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு தை 24உ (6-2-66)

# வேலையில்லாப் பிரச்னை தீர...

**1965**-ம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதிவரை தொழிற் கந்தோர்களில் பதிவுசெய்யப்பட்ட கணக்கின்படி இலங்கையில் 1,92,300 பேர் வேலையில்லாதிருப்பதாகத் தொழில் இலாகா வெளியிடும் வர்த்தமானி கூறுகிறது. பதிவுசெய்யப்படாதவர்களையும் சேர்த்தால் இலங்கையில் வேலையற்றிருப்போர் தொகை இரண்டு லட்சத்துக்குமதிகமாகவே இருக்குமெனக் கொள்ளலாம். வேலையற்றோர் பிரச்னை அதிகரித்து வருவதையே இதுகாட்டுகிறது.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் வேலையில்லாப் பிரச்னையையும் வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச்னையையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அறிவித்தது. சென்ற தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் பலவும் இந்த இரண்டு பிரச்னைகளுக்கும் தங்கள் பிரசாரத்தில் முக்கிய இடம் கொடுத்தன. தேசிய அரசாங்கம் ஆட்சிக்குவந்து பத்து மாதங்களாகிவிட்டன. வேலையில்லாப் பிரச்னை அதிகரித்தேவருகின்றது. இந்தப் பிரச்னையையும் வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச்னையையும் நீக்குவதற்கு அரசாங்கம் பலமுயற்சிகளைச் செய்து சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இப்பிரச்னைகளுக்கு ஒரு தீர்வுகாண அது மனப்பூர்வமாகப் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளதென்பதை மறுப்பதற்கில்லை. இந்த இரு பிரச்னைகளையும் அரசாங்கம்தான் தீர்க்கவேண்டுமா? இவ்விஷயத்தில் வேறு எவருக்கும் பங்கு இல்லையா? வேலையில்லாப் பிரச்னை வளர்ந்து வருவதற்கும் வாழ்க்கைசெலவுஉயர்வு அதிகரித்துவருவதற்கும் முன்னர் ஆட்சிபீடத்திலிருந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளே காரணம் என்று. ஆட்சிக்குவருவோர். தமக்கு முன்பு ஆட்சியிலிருந்தவர்கள் மீது 'பழி' போடுவது போல் நாமும் பழிபோட விரும்பவில்லை. ஆனால் வேலையில்லாப் பிரச்னையும் நாட்டின் தேசியப் பிரச்னைகளில் ஒன்றாதலால் அதற்கு ஒரு தீர்வு காண்பதில் அரசாங்கத்துக்கு மட்டுமல்ல எதிர்க்கட்சியினருக்கும் பொறுப்புக் கடமையும் உண்டு என்பதே எமது கருத்து. தேர்தல் முடிந்து மக்களின் தீர்ப்பை ஏற்று எந்தக்கட்சியும் அரசாங்கம் அமைத்து நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும், அதன் பதவிக்காலம் முடியும்வரை நாட்டின் நலனைக்கருத்தில் கொண்டு, தேசியப் பிரச்னைகளில் அதற்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டியது எதிர்க்கட்சிகளின் ஜனநாயகப் பண்புமட்டுமல்ல, மனிதப் பண்பும் கூட. ஆட்சிக்கு வந்துமே அதை எதிர்த்து, அது செய்யும் நல்ல முயற்சிகளையும் எதிர்த்து, எதற்கும் எதிர்ப்பே தெரிவித்துக்கொண்டிருப்பதுதான் எதிர்க்கட்சிகளின் கடமையும் பண்புமல்ல. வேலையில்லாப் பிரச்னை, வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச்னைகள் குறையவில்லை; அவை வளர்ந்து வருகின்றன என்று எதிர்க்கட்சியினர், இப்பிரச்னைகளைத் தங்கள் பிரசாரத்துக்குக் கருவியாகப் பயன்படுத்த நினைப்பது நாட்டின் நலனையேகுழிதோண்டிப் புதைப்பதாகும். இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு எதிர்க்கட்சியினர் உருவான யோசனைகளைத் தெரிவித்து ஒத்துழைப்பதுடன் அவர்களது நல்ல யோசனைகளை அரசாங்கமும் ஏற்க முன்வரவேண்டும்.

இதேபோன்று, வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதில் தனிப்பட்டவர்களுக்கும் பொறுப்பு இருக்கவேண்டும். அரசாங்கம்தான் தொழில் துறைகளை ஆரம்பித்தோ, அரசாங்க இலாகாக்களை விஸ்தரித்தோ வேலையற்றோருக்கு வேலைகொடுத்து இப்பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்பதல்ல. தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழில்நிலையங்களிலும், வசதி படைத்தவர்கள், தங்கள் சொத்துக்களைப் புதிய தொழில்களில் முதலீடு செய்வதன்மூலமும் வேலையில்லாப் பிரச்னையை ஓரளவு குறைக்க உதவிசெய்ய முடியும். நகைகளாகவும், வெறும் நிலங்களாகவும், வங்கியில் பணமாகவும் தங்கள் சொத்துக்களை உபயோகமின்றி வைத்திருக்கும் வசதி படைத்தவர்கள் பெரிய தொழில்களை ஆரம்பிக்காவிட்டாலும் பலருக்கும் வேலை வாய்ப்பளிக்கக்கூடிய சிறிய தொழில்களை ஆரம்பிக்கலாம்.

இதுதவிர வேலையில்லாதிருப்போரிற்பலர், தமக்கேற்ற உத்தியோகமும், தொழிலும் கிடைக்கவேண்டுமென எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுவும் இப்பிரச்னை அதிகரித்து வருவதற்கு ஒருகாரணம். வேலை தேடிவராது; வேலையைத் தேடிச் செல்லவேண்டும். அந்தஸ்து, அதிகாரம் வேண்டுமென்பதைவிடுத்து எத்தொழிலிலும் ஏற்றத் தாழ்வு கிடையாதென்பதை உணர்ந்து எந்த வேலையையும் செய்யத் தயாராகஇருப்பவருக்கு வேலையில்லாப் பிரச்னை இருக்க இடமில்லை. இங்கு புதிய தொழில்கள் பலவற்றை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தனியார் துறைக்கும் ஊக்கமளிக்கப்படுகிறது. எனவே வேலையில்லாப் பிரச்னை விரைவில் ஓரளவாவது குறையக்கூடும். என்றாலும் இந்தியாவில் பல லட்சம் குடும்பங்களுக்கு வாழ்வளிப்பதுடன் வெளிநாட்டுப் பணத்தையும் இந்தியாவுக்கு இன்று தேடித்தரும் ஒருதொழில் குடிசைக் கைத்தொழிலாகவும் பெருந்தொழிலாகவும் விளங்குகிறது. அதுதான் காந்தி மகாத்மா ஆரம்பித்து, இந்தியசுதந்திரத்துக்கும் ஆணிவேராக அமைந்த கதர் இயக்கமாகும்; கதர்த் தொழில். இங்கும் இந்த இயக்கத்தைக் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா ஒருசமயம் ஆரம்பித்தாரெனினும் அது வெற்றியளிக்கவில்லை. இன்று வேலையில்லாப் பிரச்னைக்குத் தீர்வு காணவும், அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தவும், தேசியப் பற்றை வளர்க்கவும் கதர்த் தொழிலை ஆரம்பிக்கவும் வேண்டும்.

# ஐக்கிய மாகாண வங்கி ஊழியரின் கோரிக்கைகள்

உடுப்பிட்டி, சனி

யாழ்ப்பாணம் ஐக்கிய மாகாண வங்கி ஊழியர் சங்கக் கூட்டம் அதன் தலைவர் திரு. எஸ். சுந்தரராஜன் தலைமையில் வங்கி மண்டபத்தில் நடைபெற்றது.

அகிலஇலங்கை வங்கி ஊழியர் சங்க உபதலைவர் திரு. டபிள்யூ என். ஸ்பென்சர் பேசுகையில், "யாழ்ப்பாணம் ஐக்கிய மாகாண வங்கி ஊழியர்கள் நடாத்தும் எந்த இயக்கத்திலும் அகிலஇலங்கை வங்கி ஊழியர்கள் நடாத்தும் எந்த இயக்கத்திலும் அகில இலங்கை வங்கி ஊழியர் சங்கம் கலந்து பூரண ஒத்துழைப்பைக் கொடுக்கும்" என்று கூறினர்.

திருவாளர்கள் உமாபதி, சோமஸ்கந்தா, பஞ்சரத்தினம் ஆகியோருட்படப் பலர் பேசினர்.

யாழ்ப்பாணம் ஐ. மா. வ. ஊழியர் சங்கத்தின் கோரிக்கைகளை மூன்று மாதத்திற்குள் நிறைவேற்றுவிடில் மக்கள் வங்கி இந்த வங்கியை எடுப்பதற்காகிய நடவடிக்கைகளை தாய்ச்சங்கம் எடுக்கவேண்டுமெனக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இம்மாதம் 3-ந் திகதியிலிருந்து 3 மாதத் தவணை முகாமையாளருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வங்கி ஊழியரின் கோரிக்கைகள் வருமாறு:

ஏனைய வங்கிகள் போன்று சம்பள உயர்வு.

ஊழியருக்கு வாடகைப் பணம் ஒதுக்கப்படவேண்டும்.

வங்கி ஊழியர்களுக்குக் கடனுதவிகள் வழங்கவேண்டும்.

ஏனைய வங்கிகள் போல் காரியாலய நடைமுறை வசதிகள். (காற்றோட்டம், மின்சாரம்)

பொத்துவில், சனி

பொத்துவில் தொகுதியில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சில மருந்துச்சாலைகளில் பாண்டேஜ் துணிகள்கூடக் கிடைக்காதிருப்பதாக தெரிகிறது இதனால் இங்குள்ள மக்கள் பெருங் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள்.

'ஜனவரி 8

## உரிமைகோரி வேலைநிறுத்தம் செய்யவில்லை'

நாவலப்பிட்டி, சனி

'ஜனவரி 8-ம் திகதி வேலைநிறுத்தம்செய்த ஊழியர்கள் தமது உரிமைகோரி வேலைநிறுத்தம் செய்யவில்லை. ஆனால் அரசாங்கத்தைக் கவிழ்க்கவே இவ்விதம் செய்தார்கள். ஆட்சியைக் கைப்பற்ற நோக்கம் கொண்டுள்ள அரசியல் வாதிகளின் தூண்டுதல் காரணமாகவே இத் தொழிலாளர்கள் இவ்விதம் செய்தார்கள்' என நாவலப்பிட்டி எம். பி. திரு சந்திரா கருணரத்ன ஜாதிக சேவா சங்கத்தின் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. கருணரத்ன மேலும் பேசுகையில் கூறியதாவது:

"சென்ற பொதுத்தேர்தலில் எனக்கு எதிராக வேலைசெய்தவர்கள் மீது எனக்குப் பகைமை கிடையாது. நான் அவர்கள் மீது பழிவாங்கவுமில்லை. இ. போ. ச. ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளைப் பரிசீலனைசெய்ய நான் தயாராக இருக்கின்றேன். நாவலப்பிட்டி டிப்போவில் நடைபெறும் மோசடிகள் பற்றியும் விசாரணைசெய்ய நான் நடவடிக்கை மேற்கொள்வேன்.'

## சுவீப் அதிர்ஷ்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 182-50 ஆறுதல் பரிசுகள் பெறும் 100 டிக்கட்டுகள்:

| | |
|---|---|
| 07 D 0962 | 08 Z 0940 |
| 11 D 0795 | 11 H 0188 |
| 08 P 0057 | 15 A 0074 |
| 05 B 0845 | 13 L 0621 |
| 01 N 0763 | 07 B 0174 |
| 10 W 0024 | 12 A 0780 |
| 11 A 0332 | 04 T 0354 |
| 11 M 0279 | 09 Q 0681 |
| 05 N 0443 | 15 T 0886 |
| 07 Q 0929 | 12 K 0940 |
| 04 K 0181 | 14 P 0101 |
| 14 W 0711 | 12 O 0193 |
| 06 W 0483 | 05 D 0457 |
| 03 S 0387 | 13 F 0222 |
| 05 Z 0542 | 02 Z 0682 |
| 04 C 0781 | 07 G 0586 |
| 05 Z 0022 | 13 V 0700 |
| 01 X 0352 | 03 W 0746 |
| 14 J 0724 | 04 J 0351 |
| 07 S 0224 | 12 H 0702 |
| 02 Z 0106 | 01 P 0937 |
| 07 K 0121 | 14 K 0946 |
| 04 C 0110 | 03 O 0981 |
| 12 G 0379 | 14 F 0125 |
| 14 N 0505 | 03 L 0298 |
| 13 E 0725 | 09 Z 0472 |
| 04 G 0210 | 03 B 0242 |
| 13 W 0277 | 10 R 0764 |
| 16 C 0339 | 02 K 0091 |
| 01 Z 0919 | 14 E 0174 |
| 04 C 0077 | 11 Q 0569 |
| 06 C 0099 | 13 D 0741 |
| 09 T 0373 | 12 W 0473 |
| 03 Q 0320 | 05 L 0401 |
| 13 F 0993 | 12 G 0897 |
| 15 Z 0478 | 10 Q 0 16 |
| 11 B 0370 | 05 C 0233 |
| 13 E 0623 | 14 D 0045 |
| 09 G 0414 | 12 L 0849 |
| 04 Y 0676 | 13 S 0493 |
| 02 M 0365 | 07 T 0334 |
| 10 J 0519 | 07 A 0263 |
| 12 O 0422 | 09 V 0843 |
| 14 S 0407 | 09 Q 0361 |
| 07 H 0526 | 09 Q 0557 |
| 10 V 0039 | 06 E 0982 |
| 05 N 0343 | 05 A 0516 |
| 02 M 0198 | 13 G 0653 |
| 01 C 0610 | 08 U 089? |
| 15 F 0530 | 06 Q 0874 |

(5ம் கலத் தொடர்ச்சி)

உண்பதென்று சொல்வார்கள். உண்மையில் புது நெல்லில் பொங்கியிருக்க வேண்டியது தை மாதப்பிறப்பன்றுதான். முற்காலத்தில் தைபிறக்கும்போதே நெற்கதிர்களும் பிறந்துவிடும். அதை எடுத்துவந்துபொங்கி உண்பதுதான் தைப்பொங்கல். இப்பொழுது பருவகாலங்கள் மாறிவிட்டன. தைப்பொங்கலுக்குப் பழையவருடத்து அரிசியையே பொங்குகிறோம். வயல்களில் கதிர்முற்றி வர மாசி மாதம் ஆகிவிடுகிறது. பலதேசங்களை எதிர்பாராமல் நமது அரிசித் தேவையினை நாமே பூர்த்திசெய்து கொள்ளும் காலம் எப்போதோ!

-'வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

கடந்த வியாழக்கிழமை காலஞ்சென்ற செனட்டர் எஸ். நடேசனின் ஞாபகார்த்தமாக இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் 'நடேசன் நினைவு மலர்' ஒன்றை வெளியிட்டுத் தந்தார்கள். சிவநெறி நின்ற செம்மலும், காப்பியக் கலைஞரும், இலக்கிய கலாநிதியும், அரசியல் வீரருமான திரு சுப்பையா நடேசபிள்ளையைப்பற்றி அண்ணாமலை, சென்னை, மலாயா முதலிய பல்கலைக் கழகங்களிலுள்ள தமிழ்ப் பேரறிஞர்களும், நீதியரசர்களும், அரசியல்வாதிகளும் வழங்கிய பாராட்டுக் கட்டுரைகள் இம்மலரை அலங்கரிக்கின்றன. அவர் இயற்றிய 'சகுந்தலை வெண்பா' என்ற நூலுக்கு விமர்சனம் கூறும் மூன்று கட்டுரைகள் அதில் காணப்படுகின்றன.

டி. எஸ். சேனநாயகாவுடன் சேர்ந்து ஐக்கிய தேசியக்கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவராகிய நடேசன், 1956-ம் ஆண்டு அந்தக் கட்சியின் பிரசித்திபெற்ற களனி மகாநாட்டில் 'சிங்களம் மட்டும்' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின், அதிலிருந்து பிரிந்து பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உருக்கமான பிரசங்கமும் அதில் தரப்பட்டிருக்கிறது. 'கண்ணைக் கட்டிக்கொண்டு இருட்டிற் குதிக்கிறீர்கள். நியாயமான சரியான ஒரு முடிவு செய்வது சிங்கள மக்கள் கையில் தானிருக்கிறது. உங்களோடு பல தலைமுறைகளாக வாழ்ந்துவரும் சிறுபான்மையினருக்கு நீதி அளிப்பீர்களானால் உலகம் உங்களைப்போற்றும்' என்று அச்சமயம் விண்ணப்பம் செய்த நடேசன் ஆவி பத்துவருடங்கள் கழித்து டி எஸ் ஸின் புத்திரர் தமிழர்பேரில் காட்டும் மனப்பான்மையைக் கண்டு அமைதியுறும் என்று எதிர்பார்ப்போமாக!

ஃ ஃ ஃ

இராமநாதன் கல்லூரி மாணவிகள் நடை, உடை, பாவனை மூன்றிலும் பழைய சைவத் தமிழ் முறைகளை இன்றுவரை அனுஷ்டித்து வருவது மிகவும் பாராட்டுக்குரிய விஷயம். திரு. நடேசன் 1930-ம் வருடம்பாடிய இராமநாதன் கல்லூரிப் பாட்டில் இவற்றை அழகாக வர்ணித்திருக்கிறார்.

'திங்கள் சேர் வாண்முகத்
தார் திருநீற்றுத் தேசுடனே
மங்களஞ் சேர் வாழ்வுபயில்
மாண்புடைத்தக் கல்லூரி
நித்திலத்தை யொத்த நகை
நாண் மடவார் நிரைநிரை
[யாய்
சித்திரத்தைப் போலியங்
குஞ்சீருடைத்திக் கல்லூரி,
தித்தித்த தேன்மொழி யார்
தீங்கரும்பிற் சுவை மிகுந்த
முத்தமிழின்பயன் றிளைக்கும்
மகிழ்வுடைத்திக் கல்லூரி'

இளம் கல்லூரி மாணவிகள் அன்று இப்பாட்டுக்கு அபிநயம் பிடித்து ஆடிய போது அவர் வர்ணித்த அழகுகள் யாவற்றையும் காணக்கூடியதாயிருந்தது. தாகூரின் சாந்திநிகேதனைப்போல, இராமநாதன் எழுப்பிய இக்கலைக்கோயில் தமிழ்மணமும் சைவக்கோலமும் மாறாமல் சிறப்புடன் இயங்கிவருவதற்கு திரு. நடேசன் பெரிதும் காரணமாயிருந்தார். அவருடைய மற்றொரு கனவாகிய இந்து பல்கலைக் கழகம் இன்னும் கனவாகவே இருந்துவருகிறது.

ஃ ஃ ஃ

தைப்பூசத்தன்று பலர் 'புதிர்' எடுத்து உண்டார்கள். விளைந்து முற்றிய கதிரில், ஒருபிடியைக் கொய்து வந்து அரிசியாக்கி சர்க்கரை, பால், பழம் முதலியவற்றோடு உண்பதை 'புதிது'

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஜோன்ஸன், 4 மந்திரிகளுடன் ஹொனலுலு புறப்பாடு

## தென்வியட்னும் தலைவர்களுடன் முக்கிய சந்திப்பு நடக்கிறது

### ரஸ்க், மக்னமாரா செல்கின்றனர்

வாஷிங்டன், பெப். 5

தென்வியட்னும் பிரதமர் ஏர் மார்ஷல் கை, அந்நாட்டு பிரதம ராணுவத் தலைவர் ஆகியோருடன் வியட்னும் பற்றி விவாதிக்குமுகமாக, ஜனாதிபதி ஜோன்ஸன் இன்று ஹொனலுலு புறப்பட்டார். ஜனாதிபதியுடன் வெளிநாட்டு மந்திரி ரஸ்க், பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா உட்பட 4 மந்திரிகள் செல்கிருர்கள்.

வாஷிங்டனில் கூட்டப்பட்ட விசேஷ நிருபர்கள் மகாநாட்டில் திரு. ஜோன்ஸன் இத்தகவலை அறிவித்தார்.

வியட்னும்பற்றிய அமெரிக்காவின பூரண திட்டம் இந்தப் பேச்சுகளில் இடம் பெறும். வியட்னுமுக்கு அமெரிக்க ராணுவ முக்கியத்துவமற்ற உதவிகளும் விவாதிக்கப்படும் என ஜனாதிபதி நிருபர்களிடம் தெரிவித்தார்.

இவ்விஷயத்தில் எவ்விதக் கொள்கை மாற்றமும் உருவான பலனைக் கொண்டு வராது என்றும் அவர் தொடர்ந்து கூறினார்.

#### சுவிஸ் அழைப்பு

இதற்கிடையில் வியட்னும் சம்பந்தமான அமைதிப் பேச்சுகளை தமது நாட்டில் நடத்துமாறு சுவிட்ஸர்லாந்து கேட்டிருக்றது. சுவிட்ஸர்லாந்து, ஆஸ்திரேலியா போன்ற நடுநிலைநாடுகள், போப்பாண்டவரின் வேண்டுகோளுக்கிணங்க வியட்னும் சமாதானத்துக்கு முயற்சி எடுத்து வருகின்றன.

#### 5 விமானங்கள் சேதம்

அதேசமயம் அமெரிக்க விமானங்கள் வடவியட்னுமில் பாலங்கள், தகவல் தொடர்புகள் முதலியவற்றைத் தாக்கி அழித்ததாக அறிவிக்கப்பட்டதாய் வடவியட்னும் கூறியுள்ளது. வடவியட்னும்மீது புதிதாக குண்டுவீச்சு ஆரம்பமான பின் 5 அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது. அமெரிக்க, தென்வியட்னும், தென்கொரியத் துருப்புகள் வியட்காங்கியருடன் நடத்திய தாக்குதலில் 90 கொரில்லாக்கள் கொல்லப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

## இந்திய உணவு நெருக்கடியை தீர்க்க ஜோன்ஸன் முயற்சி

### பாகிஸ்தானிலும் உணவு பற்றுக்குறையாம்

வாஷிங்டன், பெப். 5

10 கோடி டாலர் பெறுமான 30 லட்சம் டன் உணவுப் பொருட்களை இந்தியாவுக்கு அனுப்ப ஜனாதிபதி ஜோன்ஸன் அங்கீகாரம் அளித்திருக்கிருர்.

சாத்தியமான அளவு விரைவில் இவை அனுப்பப்படும். மேலும் உதவி அனுப்புவதற்கு காங்கிரஸிடம் தாம் அனுமதி கோரப் போவதாய் திரு. ஜோன்ஸன் அறிவித்தார்.

#### இந்திராவுடன் பேசுவார்

ஸ்ரீமதி காந்தி அமெரிக்காவுக்கு வரும்போது அவருடன் இந்தியாவுக்குத்தேவையான உதவிகள்பற்றித் தாம் விவாதிக்கப் போவதாயும் அதேசமயம் அமெரிக்காவிலுள்ள நண்பர்களுக்குஅவர் எவ்விதம் உதவியளிக்கவிருக்கிருர் எனக் கோரப் போவதாயும் ஜனாதிபதிநண்பர்களிடம் கூறினர். இந்தியாவுக்கு உதவுவதற்கான சட்டத்தையும் தயாரித்து வருவதாயும் அவர் கூறினர். இந்த உதவியில் இதர நாடுகளையும் சேர்த்துக் கொள்ளுமாறு அவர் விண்ணப்பித்தார்.

அமெரிக்க உணவுமந்திரி திரு. ஜோன் பிரீமனுடன் பேச்சு நடத்தியபின், ஜனாதிபதி இத்தகவல்களை நிருபர்களிடம் அறிவித்தார்.

மாத ஒன்றுக்கு 10 லட்சம் டன் உணவுப் பொருள்களை இறக்கும்வசதி இந்தியத் துறைமுகங்களுக்கு உண்டு என்றும், எனவே 30 லட்சம் டன் இறக்குமதி 3 மாதங்களில் பூர்த்தியடையும் என்றும் அமெரிக்க நிபுணர்கள் கூறியிருக்கிருர்கள்.

#### தலைவர்களுடன் ஆலோசனை

அதேசமயம் முக்கியமான காங்கிரஸ் தலைவர்களை ஜனாதிபதி ஜோன்ஸன் அழைத்து இந்தியாவுக்கு உதவி புரிவது விஷயமாக விவாதித்தார்.

இந்த ஆண்டு 1 கோடி முதல் 1 கோடியே 20 லட்சம் டன் அந்த நாட்டுக்கு உதவி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டது.

டச்சு அரசாங்கம் உணவுப் பொருள் உதவிக்காக மேலும் 10 லட்சம் டாலரை வழங்கியிருக்கிறது.

உணவு, விவசாய ஸ்தாபனத்தின் டைரக்டர் ஜெனரல் நேற்று டில்லியில் உணவு மந்திரி திரு சுப்பிரமணியத்தைச் சந்தித்துப் பேசினர்.

#### பாகிஸ்தானில்

இதற்கிடையில் மேற்கு பாகிஸ்தானில் வரட்சி காரணமாக கடும் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதாயும், அமெரிக்காவிடம் 10 லட்சம் டன் உணவுப் பொருள் கோரப்போவதாயும் பாகிஸ்தான் விவசாய மந்திரி அறிவித்திருக்கிருர்.

## இந்திராவுக்கு ரஷ்யா அழைப்பு

மாஸ்கோ. பெப். 5

வசதியான சமயத்தில் ரஷ்யாவுக்கு விஜயம் செய்யுமாறு ஸ்ரீமதி இந்திராகாந்திக்கு சோவியத் அரசாங்கம் அழைப்பு விடுத்திருக்கிறது.

செக்கோஸ்லோவேகியாவுக்கு வருமாறு அந்நாட்டு அரசாங்கமும் அழைப்பு விடுத்துள்ளது.

## அப்துல்லாவை விடுதலை செய்க

ராவல்பிண்டி, பெப். 5

டாஷ்கண்ட் பிரகடனத்தைச்சரியான முறையில் அமுல்நடத்துவதானுல் ஷேக் அப்துல்லாவையும், இதர அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு புனிதயுத்த செயல் கமிட்டித் தலைவர் இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியைக் கேட்டுக் கொண்டிருக்கிருர்

ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்ய வேண்டும் என்றும், காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென்றும் வாக்கெடுப்பு முன்னணி கேட்டிருக்கிறது.

ஸ்ரீமதி இந்திராகாந்தி நேற்று தமது வெளிவ்வகார மந்திரி சுவர்ண்சிங்கை இருமுறை சந்தித்து அடுத்த மந்திரி சபைக் கூட்டத்தில் காஷ்மீர் பற்றி விவாதிக்கப்பட வேண்டுமா என்பதை ஆலோசித்ததாகவும் இங்கு அறிவிக்கப்பட்டது.

காஷ்மீர் சுயநிர்ணய விஷயத்தில் துருக்கியும், ஈரானும உதவியளிக்கும் எனக் கூறப்பட்டது.

## காஷ்மீரக்கவி காலமானுர்

ஸ்ரீநகர், பெப். 5

பிரபல காஷ்மீரக்கவிஞரான மாஸ்டர் ஸிந்தாகவுல் இன்று காலமானுர். சாகித்திய அக்கடமி விருதை அவர் இவ்வாண்டு பெற்ருர்.

## 36 சடலங்கள் மீட்கப்பட்டன

டோக்கியோ, பெப். 5

ஜப்பானில் ஏற்பட்ட விமான விபத்தின்போது மாண்டதாகக் கூறப்படும் 133 பேரில் இதுவரை 36 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

## துருக்கி எதிர்க்கும்

அங்காரா, பெப். 5

சைப்ரஸை கிரீஸுடன் இணைக்கும் எந்த முயற்சியையும் துருக்கி கடுமையாக எதிர்த்துப்போரிடும் என அந்நாட்டு வெளிமந்திரி அறிவித்திருக்கிருர்.

## 101 பேர் கைது

கல்கத்தா, பெப். 5

சட்டவிரோதமான சணல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததாக இங்கு 101 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

## கோபாலன்

திருச்சூர், பெப். 5

கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ஏ. கே. கோபாலன் இன்று 8 நாள் உண்ணுவிரதத்தை முடித்துக்கொண்டார்.

லூனர் 9 அனுப்பியபடங்கள்

## சந்திரனில் பாறைகள் நிறைந்த சமவெளி!

### அடுத்து நாய்கள் அனுப்பப்படும்

லண்டன், பெப். 5

பிரிட்டனிலுள் பல லட்சக்கணக்கான மக்கள் நேற்று ரஷ்ய 'லூனர் 9' லிருந்து கிடைத்த சந்திரனின் படங்களை டெலிவிஷனில் கண்டனர்.

இந்தப் படங்கள், சந்திரனில் சில அங்குல கனமான தூசியே படிந்துள்ளதென்பதையும், கடினமான பாறைகள் கொண்ட நிலப்பரப்புகள் இருப்பதையும்தெளிவாகக் காட்டுகிறதென்று நோர்டல் பேர்க் அவதான நிலைய டைரக்டர் டாக்டர் லோவல் கூறினர்.

பிரிட்டனில் ரஷ்யக் கிரகத்திலிருந்து அனுப்பப்பட்ட 3 படங்கள் தெளிவாகப் பதிவாகியிருப்பதாகவும் அவர் கூறினர்.

'சில அங்குல புழுதியும், 10 முதல் 20 அடி உயர மானபாறைகளைக் கொண்ட வெளியும் இருப்பதை சந்திரனிலிருந்து எடுக்கப்பட்ட இப்படங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. உலகத்துக்கு இவ்வளவு தெளிவான ஆவலூட்டும் படங்கள் இதுவரை கிடைத்ததில்லை' என்றும் அவர் கூறினர்.

'லூனர் 9' கிரகத்தின் நிழல் ஒரு படத்தில் காணப்படுகிறது.

எனினும் ரஷ்யா இன்னும் இவற்றை வெளியிடவில்லை. விரைவில் எல்லாப்படங்களையும் அது வெளியிடும் எனத் தெரிகிறது.

நேற்று 3 மணி நேரம் லூனர் 9 பூமியுடன் ரேடியோத் தொடர்புகொண்டிருந்தது.

இன்று காலை மீண்டும் படங்கள்வர ஆரம்பித்தன.

சந்திரனில் தூசுப்படிவம் குறைவாய் இருப்பதே லூனர் 9 அதில் மூழ்காமல் மேலே இருக்க வழி செய்திருக்குமென டாக்டர் லோவல் தெரிவித்தார்.

சந்திரனில் மெதுவாகத் தரையிறங்குவதற்கு விசேஷ ஜெட் என்ஜின்கள் உபயோகிக்கப்பட்டதாயும் மனிதனை அங்கு அனுப்புமுன் நாய்கள் அனுப்பப்படுமென்றும் ரஷ்ய விஞ்ஞானி ஒருவர் கூறினர்.

## பயமுறுத்துகின்றனராம்!

பம்பலப்பிட்டி, சனி

ஜனவரி 8-ந்திகதி நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாதவர்கள் பலர் தற்பொழுது கூட்டரசாங்கத்தின் ஆதரவாளர்களினுல் பயமுறுத்தப்படுகிருர்களென சமஸ்தலங்கா மோட்டார் சேவை சமித்தியின் காரியதரிசி திரு. லெஸ்லி பெர்னுந்தோ அறிவித்துள்ளார்.

ஜனவரி 30-ந்திகதி மூன்று கூட்டரசாங்க ஆதரவாளர்கள் இரத்மலானை பஸ் டிப்போவிற்குச் சென்று அங்குள்ள ஊழியர்களைப் பயமுறுத்தியதாக பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிசார் இதையிட்டு விசாரணை நடாத்தி வருகின்றனர்.

## மடத்தில் இறந்து கிடந்த வயோதிபர்

வல்வெட்டித்துறை சனி

தொண்டமானுறு செல்வச் சந்நிதி வாகனசாலை மடத்தில் யாழ்ப்பாணத்லதச்சேர்ந்த கந்தையா சினிவாசகம் (65) என்பவர் நேற்று இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

மரண விசாரணை அதிகாரி திரு. வி. பி. இரசரத்தினம் முதுமையினுலும், சுகவீனத்தினுலும் ஏற்பட்ட இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

இறந்தவரின் சடலத்தை ஏற்க ஒருவரும் முன்வராமையால் அரசாங்கசெலவில் அடக்கம் பண்ணுமாறு கிராமசேகர் கே. இராமச்சந்திராவிடம் கட்டளையிடப்பட்டது.

## பர்மா அரிசியை ஜெர்மனி வாங்கும்

ரங்கூன், பெப். 5

பர்மாவும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும் பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றில் இங்கு கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின்படி ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு தொழிற்சாலை இயந்திரங்களையும் மற்றும் கருவிகளையும் பர்மாவுக்கு ஏற்றுமதி செய்யும். அத்துடன் பர்மியத் தொழில் நுட்ப நிபுணர்களுக்கும் பயிற்சி அளிக்கும். அரிசி உட்பட பர்மாவின் உற்பத்திப் பொருட்களை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு இறக்குமதி செய்யும்.

## எழுத்தாளருக்குப் பட்டம்

மாஸ்கோ. பெப். 5

ஐரோப்பாவில் புராதனப் பல்கலைக்கழகங்களில் ஒன்ருன கார்ல் மார்க்ஸ் சர்வகலாசாலை பிரபல சோவியத் எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவருமான மிக்காயில் சொலொகோவுக்கு டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

## மட்டக்களப்புக்கு வானொலி கமிஷன்

மட்டக்களப்பு, சனி

கொழும்பில் தனது விசாரணையை முடித்துக்கொண்டு வானொலிக் கமிஷன் மட்டக்களப்பில் தனது விசாரணையை மேற்கொள்ளவிருக்கிறது.

மட்டக்களப்பில் அடுத்த மாதம் 23, 24-ம் திகதிகளில் கமிஷன் தனது விசாரணையை ஆரம்பிக்கும். அம்பாறைக்கும் கமிஷனர் அங்கத்தினர்கள் விஜயம் செய்வார்கள்.

## ஆட்சேபம்

மாவிட்டபுரம், சனி

மண்டி எண்ணெயின் இறக்குமதித் தீர்வையை அரசாங்கம் உயர்த்துவது பற்றி மயிலிட்டி கிராமமுன்னேற்றச்சங்கமும் சனசமூக நிலையமும் தேசிய சேவை அமைச்சருக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

இயந்திரப் படகுகள் உபயோகிக்கும் வறிய மீனவர்களை இத்தீர்வை பெரிதும் பாதிக்கும் என்றும் மந்திரிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மரணத்துக்குக் காரணம் இரத்தத்தில் நஞ்சுகலந்ததே"

## உடுவில் மல்வத்தை கொலை வழக்கில் டாக்டர் சாட்சியம்

மாவிட்டபுரம், சனி

உடுவில் மல்வத்தையைச் சேர்ந்த தவசி கந்தையா என்பவர் அதே ஊரைச் சேர்ந்த வலலி ஐயன் என்பவரைச் சென்ற வருடம் மார்கழி மாதம் இரண்டாம் திகதி குத்திக் கொலைசெய்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ் எச். அத்துறுபானு முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த சட்ட வைத்திய அதிகாரி டாக்டர். ஏ. சுப்பிரமணியம் இரண்டாம் தடவையாகத் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் சென்ற மார்கழி மாதம் மூன்றும் திகதி காலை, காலம்சென்ற வல்லி ஐயனை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் வைத்துப் பரிசோதித்தேன். அப்போது அவரில் ஒரு கத்திக்குத்து காயம் காணப்பட்டது. அவருக்கு அச்சமயம் அறிவு இருந்தது. நான் அவருடன் கதைத்தேன். அவர் ஊமையாக இருந்தபடியால் நான் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க முடியவில்லை, ஆனால் சைகைமூலம் யாரோ நெஞ்சில் குத்திவிட்டதாகக் கூறினார். அச்சமயம் அவரில் உயிர் ஆபத்தான நிலையின் இருந்தது.

சாட்சியை எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். ஜே செல்வரத்தினம் குறுக்குவிசாரணை செய்த போது சாட்சி கூறியதாவது:

''காலஞ்சென்றவர் இறக்கமுன் அவருக்குத் தேவயான வைத்திய வசதிகள் பூரணமாகச் செய்யப்பட்டது. சத்திரசிகிச்சையும் நடைபெற்றது. காலம் சென்றவர் நெஞ்சில் ஏற்பட்ட காயத்தால் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டிராது. அவர் இறந்ததற்குக் காரணம் அவரின் இரத்தத்தில் நஞ்சு கலந்தமையேயாகும். இரத்தத்தில் நஞ்சு கலந்ததற்குக் காரணம் நெஞ்சில் உள்ள காயமா? அல்லது குடலில் உள்ள துவாரமா? அல்லது வேறு ஏதேனும் காரணத்தாலா? என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. இரத்தத்தில் நஞ்சு கலந்தது நெஞ்சில் காயம் ஏற்படமுன்னரா? அல்லது காயம் ஏற்பட்ட பின்னரா என்றும் கூறமுடியாது.''

நீதிபதிமேல்விசாரணையை இம்மாதம் 10-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரததினம் ஆஜரானர், சுன்னாகம் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் திரு ஏ. இராசையாவின் உதவியுடனும் வழக்கறிஞர் திரு. எஸ். ஸ்ரீதரனின் அனுசரனையுடனும திரு. ஆர். கண்ணுத்துரை வழக்கை நடத்தினார்.

# "வகுப்புவாத அடிப்படையில் தொழிலாளரை பிரிக்கமுடியது"

உடுப்பிட்டி, சனி

இடதுசாரிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் திருவாளர்கள் டாக்டர் என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் ஆகியோர் வகுப்புவாத சுலோகங்களைப் பாடுவதன் மூலம் இந்த நாட்டின் முதலாளித்துவத்திற்கு உதவி புரிகிறார்கள். ஆனால் வகுப்புவாத அடிப்படையில் தொழிலாளர்களை ஒருபோதும் பிரித்துவிட முடியாது என்பதை அவர்கள் உணரவேண்டும் இவ்வாறு யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் தலைவர் திரு. வீ. ஏ. கந்தசாமி இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

பருத்தித்துறையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. வி. சரவணமுத்து தலைமை வகித்தார். திரு வீ. ஏ. கந்தசாமி மேலும் பேசுகையில் கூறியதாவது:

மேற்கூறிய இடதுசாரித் தலைவர்கள் தொழிலாளர்களின் ஒற்றுமையை குலைக்க முயல்வது இதுதான் முதல் தடவையல்ல. இதற்கான அடிப்படை 1963-ம ஆண்டின் பெயர்பெற்ற இ. போ. ச. வேலைநிறுத்தத்தின்போதே திருவாளர்கள் பீட்டர்கெனமனும், டாக்டர் என். எம். பெரேராவும் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் இணைந்து வேலைநிறுத்தத்தை முறியடிக்க முயற்சித்தபோதே தெரிந்துவிட்டது. இந்த நாட்டின் சகல தொழிலாளர்களுக்குமாகத் தனியான ஓர் தொழிற்சங்கத்தை அமைக்கமுடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. ஜனவரி 8-ந் திகதி வேலைநிறுத்தத்தில் நாம் கலந்துகொள்ளவில்லை இந்த வேலைநிறுத்தம் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தைக் குலைப்பதை அவர்கள நோக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

திருவாளர்கள் எம். திருநாவுக்கரசு, கே. சிவகுரு

# மந்திரி வரவில்லை; மக்கள் ஏமாற்றம்

ஊர்காவற்றுறை, சனி

புதன்கிழமை காலை வேலணை மருத்துவ விடுதியையும், மருந்துச் சாலையையும் பார்வையிடுவதற்கு சுகாதார அமைச்சர் திரு ஜெயவர்த்தன வருவதாகவும் அவருக்கு வேலணை கிராம முன்னேற்றச் சங்கமும், வேலணைக் கிராமசபையும் வரவேற்பளிக்கக் காத்திருந்தன. வாழைகள் நட்டும் தோரணம் கட்டியும் வரவேற்பு மண்டபம் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. அமைச்சர் நயினாதீவுக்குப் போகும்வழியை திட்டமிடப்பட்டபிரகாரம்ஊர்காவற்றுறையால் பிரயாணம் செய்தமையால் வேலணைக்கு செல்ல முடியாமல் இருந்துவிட்டதாம் இதனால் மந்திரியின் வேலணை விஜயம் பின்போடப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மந்திரியை வரவேற்கத்திரண்டிருந்த மக்கள் பெரும்ஏமாற்றமடைந்தனர்.

தீவுப்பகுதி மக்களின் பெரிய ஆஸ்பத்திரியான ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு அமைச்சர் உத்தியோகபூர்வமாக விஜயம்செய்து பார்வையிட்டார். தீவுப்பகுதி எம். பி திரு, வி நவரத்தினம், சுகாதார இலாகாவின் நிரந்தரக்காரியதரிசி தீவுப்பகுதி காரியாதிகாரி ஆகியோர் மந்திரியை வரவேற்று ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியின் அவசிய தேவைகளை எடுத்துரைத்தனர்.

நிர்வாகக் கட்டடம் அமைக்கவும் குடிதண்ணீர் விநியோகத்தை அமுல் நடத்தவும் வேண்டுமென மந்திரியிடம் வற்புறுத்திக்கேட்கப்பட்டது.

# புதிய நெசவு நிலையங்கள்

பத்தேகம, சனி

வேலையில்லாத் திண்டாட்டப்பிரச்னையைத் தீர்க்குமுகமாக அரசாங்கம் ஒவ்வொரு தொகுதியிலும்புதிய நெசவு நிலையங்களைத் திறக்கத் திட்டமிட்டுள்ளதாக ஹினிதும எம். பி. திரு எம். எஸ். அமரசிறி எட்டலமத்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

என். விஜயரத்தினம், பி. வேலுப்பிள்ளை, ஆர். பொன்னையா ஆகியோரும் பேசினர்.

கூட்ட முடிவில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: வி. சரவணமுத்து, உபதலைவர் எம். திருநாவுக்கரசு, செயலாளர்: கே. சிவகுரு, உபசெயலாளர்: கே. கண்ணுத்துரை, பொருளாளர்: ஏ. கந்தீஸ்வரன், உபபொருளாளர்: கே, பொன்னம்பலம் டிப்போ கவுன்சில் அங்கத்தவர்களாக திருவாளர்க கே. குமாரசாமி, எம். திருநாவுக்கரசு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# 'காங்கேசன்துறையில் பிரசவ விடுதிவேண்டும்'

## சுகாதார அமைச்சரிடம் பட்டினசபைத் தலைவர் மகஜர்

நல்லூர், சனி

''காங்கேசன்துறை, பட்டினசபை எல்லைக்குள் இதுவரைகாலமும் பிரசவ விடுதி இல்லாதது கவலையளிப்பதாகும். தற்போது மயிலிட்டியில் பட்டின சபையினால் நடத்தப்படும் மாதர் சிசு பரிபாலன நிலையத்தினை ஓர் பிரசவவிடுதிமருத்துவநிலையமாக அமைத்துத் தரும்படி சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தனவை காங்கேசன்தறை பட்டினசபைத்தலைவர் திரு மு. திடவீரசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். காங்கேசன்துறை ஆஸ்பத்திரி இடமாற்றஞ் செய்யப்படவிருப்பதனால் பாதிக்கப்படக் கூடிய இப்பகுதிப் பட்டின சங்கங்களுக்கு உதவும் வகையில்மருந்தகம்ஒன்றினையமைத்துத்தரும்படி திரு, திடவீரசிங்கம் அமைச்சரிடம்கோரியுள்ளார்.

பட்டினசபைத் தலைவர் அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:

காங்கேசன்துறை பட்டின சங்க பரிபாலன எல்லைக்குள் பன்னெடும் ஆண்டுகளாக அரசினரால் ஸ்தாபிககப்பட்டு தொண்டமனாறு தொடக்கம் மாதகல் கிராமம்வரை வசிக்கும் கரையோர மக்களின் சுகாதார நலனுக்காக அயராது பணியாற்றி வந்தமேற்படி ஆஸ்பத்திரியினை, சுகாதார சீர்கேட்டினை முன்னிட்டு இடமாற்றம் செய்யவேண்டும் எனவும், கரையோர மக்களின் நலனை முன்னிட்டுத்தற்பொழுது காசநோயாளர் ஆஸ்பத்திரி இருக்கும் இடத்திற்கே இதனை மாற்றம் செய்தல் சிறந்தது என்றும் எங்கள்சபை பன்முறை அரசினரை வற்புறுத்திவந்தும் கரையோர மக்களின் நலனைப் புறக்கணித்து சபை எல்லையில்இருந்து வேறிடத்திற்கு மாற்ற முடிவு செய்தது மிகவும்வருந்தற்பாலது.

ஆகவே மேற்படி மாற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதார நலனை முன்னிட்டு பட்டினசங்க எல்லைக்குள்ஓர் மருந்தகமொன்றினைக் கூடிய விரைவில் அமைத்துத் தரும்படி பட்டினசபை மக்களின் சார்பில் தங்களை மிகவும் விநயமாக வேண்டிக் கொள்கிறேன்,

பட்டினசபை தொடங்கிய காலம் தொடக்கம் இற்றைவரை ஓர் பிரசவவிடுதி யில்லாது இருப்பது மிகவும் வருந்தற்பாலது. ஆகவே தற்பொழுது மயிலிட்டியில் மேற்படி சபையினால் நடத்தப்படும் மாதர்சிசு பரிபாலன நிலையத்தினை ஓர்பிரசவ விடுதி மருத்துவ நிலையமாக அமைத்துத் தரும்படி மிகவும் விநயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

1963-ம் ஆண்டு தொடக்கம் ஓர் மேலதிக மருத்துவ மாதினைத்தந்து உதவும்படி தொடர்புகொண்டும், மேற்படி விஷயம் மேலதிகாரிகளுடன் நேரடித் தொடர்பு கொண்டும், இற்றைவரை ஓர் மருத்துவமாதினை தந்துதவாததுவருந்தத் தக்கது. ஆகவே இவ்விஷயத்தைத் தாங்கள் நேரில் பார்வையிட்டு விசாரணை செய்து உடனடியாக ஓர் மருத்துவமாதினை நியமனம் செய்து தரும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகள் யாவற்றிற்கும் சிகிச்சையளிக்கும் நிபுணர்கள் வாரத்தில் மூன்று தடவையாவது விஜயஞ்செய்து நோயாளிகளைப் பார்வையிடவேண்டும்.

ஆஸ்பத்திரியில் அடிக்கடி நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டினை நிவிர்த்திக்க ஆவன செய்யவேண்டும்.

நோயாளிகளின் உணவுகள் யாவும் அவர்களின் திருப்திக்கேற்பவழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

இம்மகஜரின் பிரதிகள் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம், சுகாதார சேவைகள் டைரக்டர் டாக்டர் ஹேர் குணரத்தின ஆகியோருக்கும் வழங்கப்பட்டன.

# ஞானசேகரக் குருக்கள் மறைவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் தெற்கு சனசமூக நிலைய நிர்வாகத்தினரின் அவசர கூட்டத்தில் கற்பக விநாயகர் ஆலய பூசகரான பிரம்மஸ்ரீ இ ஞானசேகரக் குருக்களின் மரணம்குறித்து அவ்வூர் மக்கள் சார்பில் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டது. இரண்டு நிமிட மௌனஅஞ்சலியை மேற்கொண்ட இச்சபை தனது அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டதாவது:-

''பிரம்மஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்களின மறைவு ஈழத்துத் சைவசமூகத்துக்குப் பெரும் இழப்பாகும். அவரது தீவிர தொண்டுகளினால் அதிக நன்மையடைந்தவர்கள் நல்லூர் தெற்கு சைவமக்களேயாகும். இலவச சமய திட்சைகளையும் சமயப்பிரசங்கங்களையும் நாடு முழுவதும் சென்று நடத்திய இப்பெரியார், எமது சமூகத்தில் 15 வருடம் தொண்டாற்றியது எமது ஆத்மீக வளர்ச்சிக்கும், சமய அறிவுக்கும் ஒரு அளப்பரிய கைங்கரியமாகும். சமயப் பெரியார்கள் வரிசையில் முன்னிற்கும் இப்பெரியார் சுவாமிக்குச் சாத்தும் அஷ்டபந்தனம் என்னும் மருந்தை ஆத்மரீதியாகத் தயாரித்து வெளிநாடுகளுக்கும் விற்பனைசெய்தவராகும். அத்தகைய கடவுள் தொண்டருக்கு எமது சமூகம் இறுதி மரியாதையையும் அஞ்சலியையும் சமர்ப்பித்துக் கொள்ளுகின்றது.''

பெட்டா பார்மஸி
உங்களுக்கு வேண்டிய
மருந்துகள், ரசாயனப் பொருள்கள், மருந்து தயாரிப்பதற்கான பொருள்கள் ரண சிகிச்சைக் கருவிகள், காயங்களைக் கட்டுவதற்கான துணிகள் யாவற்றுக்கும் எம்மிடம் வரவும்
வி. பி. பி. ஓடர்கள் ஏற்கப்படும்
23, டாம் வீதி கொழும்பு 12

பவரின்
காய்கறிப் போரை

ஏ. பவர்

## விளம்பரம்

### விற்பனைக்கு

தோப்புக்காடு முருகன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கீழ்க்காணும் பொருட்களை அற்பனவு செய்யத் தீர்மானித்திருக்கிறது. பொருட்களை பார்வையிட விரும்புவோர் மேற்படி சங்கக் களஞ்சிய அறையில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பார்வையிடலாம்.

பொருட்கள்: வாசொப். பி. எஸ் ஏ நீர் இறைக்கும் யந்திரம், மூன்று அங்குல ஹோஸ், வில்லிஸ் பிறெஸ் போட் நீர் இறைக்கும் யந்திரம் மூன்று அங்குல ஹோஸ், இறவுட்டிங் யந்திரம், றிமிஸ் வைபறேற்றர், வில்லிபேஸ், வைபறேற்றர், பாலமரத் தீராந்திகள் பல அளவுகளில், லொறி (சவுலட் லேலண்ட் மாஸ்டர்) CV 5529(மதிப்பு விலை ரூபா 10,000) பைன் போட் பலகைகள் 1500 சதுர அடிக்குமேல் உள்ளது. இன்னும் பல பாவித்த பொருட்களும் உள. காரியதரிசி, தோப்புக்காடு, காரைநகர். 1591

### தேவை

அரியாலை, பிரப்பங்குளம் மகாமாரியம்மன் (நாச்சிமார் கோவில்) பராமரிப்புத் திருச்சபை

யடி ஆலயத்திற்கு அர்ச்சகா தேவை.

400 நாவலர் வீதி அரியாலை, யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்க.

வீ. கதிரவேலு,
காரியதர்சி.

4-2-66. 1589

### தேவை

எமது சங்கத்திற்கு ஒரு விற்பனையாளன் தேவை. ஆங்கிலம் அல்லது தமிழ் கனிஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தியடைந்தவராயும் 22 க்கும் 30 க்கும் இடைப்பட்ட வயதுடையவராயும், இருத்தல் வேண்டும். சம்பளம்:
100 — 150 / 10 x 5 — எல்லாப்படிகளும் உட்பட. விண்ணப்ப முடிவு திகதி 13-2-66 ஞாயிற்றுக்கிழமை. விண்ணப்பத்துடன் அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரத்தினதும் கல்வித் தகைமைச்சான்றிதழினதும் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

கிளிநொச்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்
கிளிநொச்சி.

3-2-66 1590




# சென். ஜோன்ஸிடம் நாலந்தா தோல்வி

## தெய்வேந்திரா 35 ஓட்டங்கள்நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகள் வீழ்த்தினர்

யாழ்ப்பாணம், சனி

சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு நாளந்தாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற காரசாரமான கிரிக்கெட் போட்டியில் கடுமையான போட்டியின் பின்னர் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி 3 விக்கட்டுகளாலும் 3 ஓட்டங்களாலும் கொழும்பு நாளந்தாக் கல்லூரியை வெற்றியீட்டியது.

சென் யோன்ஸ் வீரர்கள் கடைசி நேரத்தில் போட்டி முடிவதற்கு சொற்ப நேரம் இருக்கும் தறுவாயில் மளமளவென்று பந்தை விளாசித்தள்ளி மின்னல் வேகத்தில் அதிகமான ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். முதலாவது ஆட்டத்தில் முதலில் கொழும்பு நாளந்தா கோஷ்டியே துடுப்பெடுத்தாடியது. இவர்கள் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 151 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் இக்கோஷ்டியின் சிறந்த துடுப்படி வீரர்களான கே. ரணசிங்கா 50 ஓட்டங்களும் களுப்பெருமா 35 ஓட்டங்களும் பெற்றனர். சென் ஜோன்ஸ் எறிபந்து வீரர்களான தெய்வேந்திரா 35 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகளையும், சுரேந்திரா 18 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்கள்.

சென். ஜோன்ஸ்முதல்இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 119 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் தெய்வேந்திரா 21 ஓட்டங்களையும், ஞானக்கோன் 22 ஓட்டங்களையும் முத்துத்தம்பி விக்கட்டை இழக்காமல் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொழும்பு நாளந்தாக் கல்லூரியின் சிறந்த எறிபந்து வீரர்களான வாஸ்குணவர்த்தன 36 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கட்டுகளையும் என். பெரேரா 18 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுகளையும் எ. டி. சில்வா 29 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுகளையும் வெற்றிகரமாக வீழ்த்தினர்கள். இரண்டாவது ஆட்டத்தில் கொழும்பு நாளந்தா துடுப்பெடுத்தாடி சகல விக்கட்டுகளையும்இழந்து மொத்தம் 90 ஓட்டங்களே பெற்றது. இதில டீல்வெல 14 ஓட்டங்களையும், என் பெரேரா 19 ஓட்டங்களையும் பெற்றனர். சென். ஜோன்ஸ் எறிபந்து வீரர்களான தெய்வேந்திரா 22 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 7 விக்கட்டுகளையும், சூரியகுமார் 33 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்கள். சென். ஜோன்ஸ் இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பெடுத்தாடி 7 விக்கட்டுகளை இழந்து 125 ஓட்டங்களைப்பெற்றிருந்தது. ஜெயநாயகா 21 ஓட்டங்களையும், தெய்வேந்திரா 29 ஓட்டங்களையும், எம். சுரேந்திரா விக்கட்டை இழக்காமல் 30ஓட்டங்களையும பெற்றிருந்தனர். கொழும்பு நாளந்தா எறிபந்துவீரர்களான வாஸ்குணவர்த்தன 46 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கெட்டுகளையும், எ. டி. சில்வா 10 ஓட்டங்கள்நஷ்டத்துக்கு ஒரு விக்கட்டையும் வீழ்த்தினார்கள்.

சென். ஜோன்ஸ் சிறந்த வீரரான விக்கட் காப்பு வீரர் முத்துத்தம்பி இவ் ஆட்டத்தில் 3 விக்கட்டுகளைவீழ்த்துவதற்கும்ஞானக்கோன், வைரவப்பிள்ளை ஆகியோர் முறை மும்மூன்று வீரர்களை வீழ்த்துவதற்கு காரணமாக இருந்தார்கள். இப்போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

---

### விளையாட்டுக்கழக கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் ஸ்பூட்னிக் விளையாட்டுக்கழக மத்திய நூல்நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் நிலைய மண்டபத்தில் திரு. எஸ். ஜெகந்நாதன் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவில் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர் எஸ். ஜெகந்நாதன், இணைச்செயலாளர் எஸ். ஆறுமுகம், பூ. புலேந்திரராஜா (நல்லை அமிழ்தன்). பொருளாளர் க. நவரத்தினம், உபதலைவர் செ. வரதராசா. நிர்வாகசபை அங்கத்தவர்களாக குமார்தனபால், கே தம்பையா, எஸ். கணேசலிங்கம், ராமச்சந்திரன், கே. நாகேந்திரம், தமிழ்மணி எஸ். கணேசசுந்தரன், ஜே. மண்டலேஸ்வரன்என்போர் தெரிவுசெய்யப்பட்டனர்.

கூட்டமுடிவில்பெப்ரவரிக் கடைசியில் தமிழ் இலக்கிய விழாவொன்றினை நல்லைநகரில் நடத்தி பிரபல எழுத்தாளர்களும், கவிஞர்களும் பங்கு பற்றும் கருத்தரங்கு, கவியரங்கு. கதையரங்கு, கலையரங்கு ஆகியனவும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்

## வரி விளம்பரம்

### தேவை

எமது தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. இம்மாதம் 30-ம் திகதிக்கு முன் நேரில் வரவும் பாஸ்கரன் இண்டஸ்றீஸ், 44/3, இந்துக் கல்லூரி ஒழுங்கை, (வசந்தா சேலை அச்சகத்திற்கு அருகாமையிலுள்ள ஒழுங்கை) நீர்வாவியடி, யாழ்ப்பாணம். 1876

வெல்டிங் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். விபரங்கட்குவிளம்பர இல: 1870, ஈழநாடுமே/பா என எழுத்துமூலம்விண்ணப்பிக்கவும். 1870

மனேச்சர் தேவை பிணைப் பணம் ரூ. 500/- செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும் மற்ற விபரங்களை நேரில் தொடர்பு கொள்ளவும். லங்கா நியூஸ் சென்ரர், 301/10 பெரிய கடை (பஸ்நிலைய மத்தி) யாழ்ப்பாணம் 1879

கிராம அபிவிருத்தி இலாகாவில் வர்த்தக கல்வி தராதரம் உள்ள மனேச்சர்கள் தேவை. முழு விபரங்களுக்கும் விண்ணப்பப் பத்திரத்துக்கும் ரூபா 2-50 போஸ்ரல் ஓடர்அனுப்புக. றஸ்ட் டுப்பிளிக்கேற்றர், கிரிமலை வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 1878




### கொழும்பு
### ஞாயிறு 6 2-66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

364 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 5-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை. 8-15 இஸ்லாமியகீதங்கள்.

364 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை, 364 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு6-15 கிறிஸ்தவஆராதனை, 6 45 பாட்டு, 7-45 வீணை, 7-30 மன்ற நாடக விழா, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி 9-15 பாட்டு.

### விற்பனைக்கு

ஒரு வருடத்துக்கு மேல வளர்ச்சியுள்ளதும், டின்களில் வைத்து நன்கு வளர்க்கப்பட்டதுமான "பான் பாம்" பூஞ்செடிகள் (Fan Palm) விற்பனைக்கிருக்கின்றன. சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். ஐ. முருகேசு, திருமகளகம், ஆனைக்கோட்டை. 1877

E L ஆறுயிரம் தொடர் புள்ள சோமசெற் மிகநல்ல நிலைமையில் நிறம் கறுப்பு எஸ் கோரான் சிஸ்ட்ரர் ஒலிபெருக்கி சம்பூரணமாக றெக்கோட்ஸ் உடன் நல்ல நிலைமையில். பார்வையிடல், பெற்றோல் நிலயம் தொண்டமனாறு. 1850

### கொமிஷனுக்கு

வவுனியா புதிய பஸ்நிலையத்திற்கு அருகாமையில் கூப்பன் கடை ஒன்று கொமிஷனிற்கு கொடுப்பதற்கு இருக்கிறது விபரங்களுக்கு த. செல்வநாயகம், 44, கண்டிவீதி, வவுனியா.

1868

### கல்வி

42 வருட அனுபவமுள்ள ஆசிரியர் ஆங்கிலத்திலும் தமிழிலும் 3 மாத, 6 மாத, 1 வருட சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகள் காலையிலும் மாலையிலும் நடத்துகிறார். விண்ணப்பிக்கவும். விடுதி வசதி உண்டு. வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. ஸ்தாபிதம் 1924.

1840

### வைத்தியம்

தொய்வு, கசம் நீரிழிவு, சேந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## கர்ப்பிணிகளுக்கு உணவில்லை

ஹப்புத்தளை, சனி

ஹல்துமுல்லையில் இருக்கும் பிரசவ ஆஸ்பத்திரியில் கர்ப்பிணிகளுக்கு உணவு கிடைப்பதில்லையெனவும், இதனால் அவர்கள் வெளியிலிருந்தே தமது உணவைப் பெறவேண்டியுள்ளதாகவும் அறியப்படுகிறது.

உத்தரவாதத்துடன்

பழைய டயர்களைப் புதுப்பிப்பதற்கும்
திறமான றப்பர் பொருட்களை தொகையாக
பெறுவதற்கும்
மிகச்சிறந்த இடம்.

ஜெனரல் இண்டஸ்றீஸ் லிமிட்.,
அத்தியடி, யாழ்ப்பாணம்

காட்சி அறை:
20, ஸ்ரான்லி வீதி போன்: 7024

உங்கள் தேவை ! எங்கள் சேவை !

" லேடன் " LEYDEN
தயாரிப்புகள்:-

○ பெனியன்
○ ஸபோட் சேட்
○ ரீ சேட்
ரெறி சேட்
● ரெறி பிளவுஸ்
● பேபி வெஸ்ட்
● காலுறேஸ்
(Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்
32A கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பல்வேறு சங்கங்கள் இருப்பது அவசியமற்றது"

## ஆசிரியர்களுக்கு எம். பி. புத்திமதி

பீசாலை, சனி

'பல்வேறு சங்கங்கள் அமைத்து ஒன்றுடன் ஒன்று மோதுவதிலும் பார்க்க சகல ஆசிரியர்களுக்கும் தொகுதிவாரியாக ஆசிரிய சங்கம் இருப்பது நல்லதாக இருக்கும். இந்த விதத்தில் கிளிநொச்சியிலுள்ள ஆசிரியர்கள் முன்மாதிரியாக நடத்துகொண்டிருப்பது வரவேற்கத் தக்கதாகவிருக்கிறது.'

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் திரு. வே. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற கிளிநொச்சித் தொகுதி ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கலவெட்டித்திடல் நாகேசுவர வித்தியாசாலை தலைமைஆசிரியர் திரு. இ. த. சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது:

பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் குறைவு. தளபாடங்கள் இல்லை. கட்டட வசதி கிடையாது. அரசாங்கம் கொடுக்கும் மானியம் பற்றுதிருக்கிறது. உள்ளதைக்கொண்டு வாழவேண்டியநிலையில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில் ஆசிரியர் பல சங்கங்களைவைத்து மோதிக்கொண்டிருப்பது அர்த்தமற்றது.

பின்வரும் உறுப்பினர் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:-

போஷகர்: பண்டிதர் கா. பொ. இரத்தினம், தலைவர்: திரு. வே. கதிரவேலு, உபதலைவர்: திரு. ஆர். ரி. சுப்பிரமணியம், செயலாளர்: திரு. கா. நாகலிங்கம், உபசெயலாளர்: திரு. த. சிதம்பரப்பிள்ளை, பொருளாளர்: திரு. ஏ. கே. இராஜேந்திரம். எட்டுப்பேர் கொண்ட நிர்வாகசபையும் நியமிக்கப்பட்டது.


REGAL—JAFFNA
NOW SHOWING
WORLD BY NIGHT NO. 3
(Pancrorama—Color)
(ADULTS ONLY)

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45 க்கு மட்டும்
பாரத்பூஷன் - நிம்மி
நடித்த
புயலுக்குப் பின்
(தமிழ்)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
ஜெமினி - சாவித்திரி
நடித்த
கற்பகம்

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) நவாலாஸ் (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடேர்ன் (பண்டாரவளை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (அட்டன்)
தீவொளி (நூரளை) கல்யாணி (நாவலப்பிட்டி) சந்தியா (கம்பளை)



பூம்புகார்
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜ்ஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஒ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்த
அனைவரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஒளிவீச்சு:

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
எம். ஜி. ஆர். -- சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்


## பொருளாதார. . . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டங்களாக ஆட்சியிலிருந்த அரசாங்கம் தமிழ் மக்களை நசுக்கிவந்தது. இலங்கையின் சுதந்திரத்தை தமிழ் மக்களும் அனுபவித்து நாட்டு சுபீட்சத்துக்கு உழைக்கக்கூடிய வழியை தேசிய அரசாங்கம் வகுத்துள்ளது".

டாக்டர் சிவானந்தன் பேசுகையில் "நாட்டு மக்களிடையே இன்று ஏற்பட்டுள்ள ஒற்றுமையுணர்ச்சிக்கு வழிவகுத்த தேசிய அரசாங்கத்தை பாராட்ட வேண்டும். இன, மதவேறுபாடுகளை மறந்து நாட்டின் வளர்ச்சிக்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது" என்று குறிப்பிட்டார்.

மற்றும் பலரும் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. 400 சிங்கள. தமிழ் மாணவர்கள் தேசிய கீதம் இசைத்தனர்.

### மன்னாரில்

கடந்த பத்துவருட காலமாக பெப்ரவரி 4-ந் திகதியை ஏனைய பகுதிகளிலும் பார்க்க மும்முரமாக துக்கதினமாகக் கொண்டாடிய மன்னார்ப்பகுதி மக்கள் இம்முறை வெகுசிறப்பாகவும், குதூகலமாகவும்முதன் முறையாகக் கொண்டாடினர். கத்தோலிக்க சமயத்தவர்கள். லங்கா மாதா திருநாளாகக் கொண்டாடினர். அன்று காலை மன்னாரிலுள்ள செண். செபஸ்ரியன்ஸ், சென். மேரிஸ், சென். லூசியா ஆலயங்களில் ஒலித்த மணியோசையுடன் லங்கா மாதா திருநாள் பூசை நடைபெற்றது. பொலிஸ், ராணுவ அணி வகுப்புகளும் நடைபெற்றன. மாலையில் மாணவ, மாணவிகளின் விளையாட்டுப் போட்டியும், கதம்பநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. மன்னார் மாந்தை முசலிப் பிரிவுகளிலுள்ள அநேகபாடசாலைகள் பங்குபற்றி சுதந்திரதின விழாவை சிறப்பித்தன.

### உடுப்பிட்டியில்

"இம்முறை நாம் முதல் தடவையாக ஒற்றுமையுடனும் சந்தோஷத்துடனும் சுதந்திர தினத்தைக்கொண்டாடுகிறோம். இதே ஒற்றுமையும் நல்லெண்ணமும் என்றும் நிலைக்கவேண்டும். நம்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் தேசிய ஐக்கியத்துக்கும் பாடுபடுவோம் என்ற இத்தினத்தில் நாம் அனைவரும் சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும்". இவ்வாறு பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. என். நடராசா பருத்தித்துறை பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சுதந்திரதினக் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் கூறினார்.

வடமராட்சி காரியாதிகாரி திரு. ஏ சி. விசுவநாதன் உட்பட மற்றும் பலர் பேசினர்.

அல்வாய் இந்துவாலிபர் சங்கத்தினரும் சுதந்திரதின விழாவைக்கொண்டாடினர்.

### காங்கேசன் துறையில்

காங்கேசன்துறையின் பல பகுதிகளிலும் சுதந்திர தினம் உற்சாகமாகக்கொண்டாடப்பட்டது. கடந்த வருடங்களில்கறுப்புக்கொடி பறந்த இடங்களில் இம்முறை கட்சிக்கொடிகள் காட்சியளித்தன

காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை மைதானத்தில் சுதந்திரதின விழா வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு தொழிற்சாலை அதிபர் திரு. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். தொழிற்சாலை மறுமலர்ச்சிக் கழகத்தினரின் நாடகங்களும் கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

## 'சிங்களம் கட்டாய பாடமாகவேண்டும்'

பம்பலப்பிட்டி, சனி

இலங்கை முழுவதிலுமுள்ள சகல பாடசாலைகளிலும் சிங்களத்தைக் கட்டாய பாடமாக்குதற்கு உடனடியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கல்வி பொதுத் தராதர (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சாத்திகளுக்கும் ஆறு வருட காலத்துள் சிங்களத்தை ஒரு கட்டாய பாடமாக்க வேண்டும் எனவும் கோரும் பிரேரணைக்கான முன்னறிவித்தலை செனட்சபை உறுப்பினர்களான ஏ. பி. ஜெயசூரியா, எவி. டி. எஸ். சிறீவர்த்தன, ஆர். எல். ஏ. ஐ கறண்ணகொட, ஏ. தஸநாயக்கா, ஏ. றெஜினோல்ட் பெரேரா, ஏ. ரி. ஏ. டி. சூஸா, ஜே. பீ. ஒபயசேகரா ஆகியோர் கொடுத்துள்ளனர்

இம்மாதம் 14-ம் திகதி செனட்சபை கூடும்போது இப்பிரேரணை கொண்டு வரப்படவிருக்கிறது.

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் ஸ்ரீ நல்லூர் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று முதல் முத்தமிழ்மணி சி. எஸ். எஸ். மணிபாகவதரின் கதாப்பிரசங்கம் மூன்று தினங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இன்று மாலை 6 மணி முதல் 'அர்ச்சுனன் தவம்' என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழும்.

ஃ ஃ ஃ

இன்று காங்கேசன்துறை நகுலேஸ்வர?... தங்கன்யவளை ஸ்ரீ குருநாத சுவாமி கோயில் அலங்கார உற்சவம் 12-ம் நாள் திருஊஞ்சல் திரு. சி. எஸ். எஸ். மணிபாகவதர் கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

## "தேசிய அரசாங்கத்தில் நம்பிக்கை கொள்ளுங்கள்"

### சுகாதார மந்திரி

ஊர்காவற்றுறை, சனி

"தமிழ்—சிங்கள மக்களிடத்தே தேசிய அரசாங்கம் நல்லுறவை வளர்த்து வருகிறது. தமிழ்பேசும் மக்கள் தேசிய அரசாங்கத்தில் பரிபூரணநம்பிக்கை வைத்து ஒத்துழைப்பதோடு ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் போராடவேண்டும்."

நயினாதீவுக் கிராமசபையினரால் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது நயினாதீவில் பிரசவ விடுதியையும், ஆண்கள் சிகிச்சை நிலையத்தையும் திறந்துவைத்துப் பேசுகையில் சுகாதார அமைச்சர் திரு. ஜயவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நயினாதீவு கிராமசபைத் தலைவர் திரு கே. தம்பையா தலைமையில் நடந்த வரவேற்புக்கூட்டத்தில் மந்திரிக்கு தமிழிலும், சிங்களத்திலும் வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

மந்திரி திரு. ஜயவர்த்தன நயினாதீவு நாகபூஷணி அம்பாள் கோவிலுக்கும், புத்தபிரான் ஆலயத்திற்கும் சென்று வணக்கம் செலுத்தினார்.

தீவுப்பகுதி எம். பி. உரை நிகழ்த்துகையில் எதிர்க்கட்சியினர் எப்படிப் பிரசாரம்செய்தாலும் தமிழ் மக்கள் தேசிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை இழக்கமாட்டார்கள் எனக் குறிப்பிட்டார்.

மந்திரி திரு. ஜயவர்த்தனவுடன் அவர் பாரியார் திருமதி ஜயவர்த்தன, சுகாதாரநிரந்தரக் காரியதரிசி திரு. வி. பாலசிங்கம், தீவுப்பதி எம். பி. திரு. வி. நவரத்தினம், திருமதி நவரத்தினம்ஆகியோரும் நயினாதீவுக்கு வந்திருந்தனர்.

## சந்திரன் கரடு முரடானது?

மாஸ்கோ, பெப். 5

சந்திரனின் மேற்பரப்பு கரடுமுரடானதாக இருப்பதாக ரஷ்ய விஞ்ஞானிகள் அறிவித்திருக்கிறார்கள்.

எரிமலை பாறை, அல்லது எரிமலை சாம்பல் போன்ற துவாரம் உள்ள பாறைகள் இருப்பதாயும் அவர்கள் கூறினர்.

சந்திரனை எட்டிப்பிடிக்கும் ரஷ்ய முயற்சி அமெரிக்க வான்வெளித் திட்டத்துக்கு உபயோகப்படக்கூடுமென அமெரிக்க நிபுணர்கள் நம்புகிறார்கள்.

## 1,92,242 பேர் பதிவு செய்துள்ளனர்

பம்பலப்பிட்டி, சனி

அண்மையில் வெளியான தொழில் வர்தமானியில் தற்பொழுது 1,92,242 பேர் வேலைகோரி தொழில் இலாகாக்களில் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நம்பூதிரி உண்ணாவிரதம் நின்றது

திருவனந்தபுரம், பெப் 5

சிறை வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் முதன்மந்திரி திரு நம்பூதிரிபாத்தும் அவரது 12 சகாக்களும் இன்று காலை தங்கள் உண்ணாவிரதத்தை கைவிட்டனர். உண்ணாவிரதமிருந்த திரு கோபாலனுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் அவர்கள் உண்ணாவிரதமிருந்தனர்.

## ஆசியாவில் நீளமான 'நேரு பாலம்'

பாட்னா, பெப் 5

பீகாரில் அமைக்கப்பட்டிருக்கும் ஆசியாவிலேயே மிக நீளமான "நேரு பாலத்தை" பிரதம மந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி இன்று காலை திறந்துவைத்தார்.

ரூபா 270 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட இப்பாலம் டில்லிக்கும் கல்கத்தாவுக்குமிடையேயான தூரத்தை 125 மைல் குறைக்கிறது.

## உரியவர் யார்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில், மாணவரது சீசன் டிக்கட் ஒன்று திரு.வீ சின்னப்பு என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

இரு கூப்பன் புத்தகங்கள் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் 'ஈழநாடு' காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.


## காணவில்லை

4-2-66 வெள்ளிக்கிழமை மாலை 7மணியளவில் எனது வளர்ப்பு மகள் சந்திரா காணமல் போய்விட்டாள் வயது 14. நிறம் சிவப்பு. உயரம் சுமார் மூன்றரை அடி. கிரப்புத்தலை, சிவப்பும் சாம்பல் நிறமும் உள்ள மேற்சட்டையும் வெள்ளையில் சிவப்புப்பூ உடைய பாவாடையும் அணிந்திருந்தாள். இவரைப்பற்றிய தகவல் தெரிந்தோர் தயவு செய்து அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது சு. சரவணபவான், 132, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கோ அறிவிக்கவும்.

188


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org